**செய்தி வெளியீடு எண் : 177** **நாள்: 25.01.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களைத் தடுக்கக் கோரி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம்.</u>**

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுகா, புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த 3 தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுகா, புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த 3 தமிழக மீனவர்கள், 23-1-2022 அன்று வேதாரண்யம் கடற்கரையிலிருந்து 16 கடல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 300 கிலோ எடைகொண்ட மீன்பிடி வலை, தொலைத்தொடர்பு சாதனங்கள் (GPS, VHF) மற்றும் 30 லிட்டர் டீசல் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை அறிந்து தான் மிகுந்த வேதனையடைந்ததாகவும், தாக்குதலுக்குள்ளான மீனவர்கள் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அப்பாவி மீனவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்துவதன்மூலம், தமிழக மீனவர்களை, அவர்களது பாரம்பரிய பாக்

வளைகுடா மீன்பிடி கடல் பகுதிகளுக்கு வரவிடாமல் தடுப்பதை இலக்காகக் கொண்டு செயல்படுவதையே காண முடிகிறது என்றும், இலங்கையைச் சார்ந்தவர்களால் நடத்தப்படும் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள், நமது மீனவ மக்களின் வாழ்வாதாரத்திற்கு கடுமையான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளன என்றும், இந்த விவகாரத்தில் இந்திய அரசு வாய்மூடி மௌனமாக இருத்தல் கூடாது என்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் மீது இதுபோன்று தாக்குதல் நடத்தப்படுவதும், அவர்களது உடைமைகளை கொள்ளையடிக்கும் அல்லது சேதப்படுத்தும் இதுபோன்ற செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாத வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

- - - -

**P.R.No: 177** **Date: 25.01.2022**

**Text of D.O. letter dated 24-1-2022 of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to the Hon'ble Union Minister for External Affairs regarding the attack on innocent Tamil fishermen by Sri Lankan Nationals on 23.1.2022.**

I wish to draw your immediate attention to yet another outrageous incident of attack on the innocent Tamil Nadu fishermen by Sri Lankan Nationals on 23.1.2022.

In the latest incident, three fishermen from Puspavanam Village, Vedaranyam Taluk, Nagapattinam District, Tamil Nadu who had ventured out for fishing on 23.01.2022 in their FRP boat

(bearing registration No. IND-TN-06-MO-6575) were attacked by a group of unidentified Sri Lankan nationals around 9.00 pm, while they were fishing near 16 Nm from Southeast of Vedaranyam coast. In this attack, they were robbed of a 300 kg fishing net, GPS & VHF equipment, 30 Litres of Diesel and also were physically attacked. The injured fishermen are undergoing treatment in Government Hospital, Vedaranyam.

It is observed that continuing attacks on innocent Tamil Nadu fishermen by the Sri Lankan Nationals are clearly aimed at keeping the Tamil Nadu fishermen away from their traditional fishing waters of Palk Bay.

I am constrained to point out that these incidents of attacks by Sri Lankan Nationals are disconcerting. This has become a matter of life and death for thousands of our fisherfolk whose livelihood is under serious threat. India cannot continue to be seen as a mute spectator as the rights of Indian fishermen are repeatedly trampled upon.

I request the Government of India to take this up with the Sri Lankan Government in a stern manner such that acts of physical assault and robbing or damaging of assets of Tamil Nadu fishermen does not take place in future.

I solicit your urgent action in this regard.

- - - -

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**